பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 05 சனிக்கிழமை (20-07-1996) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 154

# அரச படைகளின் மீட்பு அணிகள் அலம்பில் பகுதியில் தரையிறக்கம்

## இப்போது சண்டை அங்கு தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 20

முல்லைத்தீவு படைமுகாம் மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலைத் தொடுத்ததை அடுத்து—

அந்த முகாமில் இருந்த துருப்புகளுக்கு உதவுவதற்கான மீட்பு அணிகள் அங்கிருந்து பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அலம்பில் பகுதியில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் நேற்று முன்தினமே தரையிறக்கப்பட்டன. இதனையடுத்து அந்தப்பகுதியிலும் சண்டை வெடித்திருக்கின்றது.

செய்தி ஏஜென்ஸிகள் பலவும் இத்தகவலை வெளியிட்டன.

உதவிக்கு அனுப்பப்பட்ட படையினர் முல்லைத்தீவு முகாமுக்கு அருகே தரையிறக்கப்பட்டனர் என்றும்—

அவர்கள் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது என்றும்—

இங்கும் அங்குமாக சண்டை தொடர்ந்து நடந்து வருவதாகவும்—

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை படகு தகர்ப்பு?

இலங்கையின் வட-கிழக்கு கரைக்கு அப்பால் விடுதலைப் புலிகள் வெடிப் பொருள்கள் நிரம்பிய படகு ஒன்றினால் கடற்படைக்கப்பல் ஒன்றை இடித்து மூழ்கடித்து விட்டதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி அறிவித்தது.

படகு தகர்க்கப்பட்ட சமயம் அதில் 35பேர் இருந்ததாக பி.பி.ஸி. இன்று அதிகாலை அறிவித்தது.

## இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 20

நாளை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு நடைபெற இருந்த பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை இந்தக் கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

## சமருக்கு தலைமை வகித்த பிரபா காயமுற்றாராம்!

கொழும்பு, ஜூலை 20

முல்லைத்தீவு முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அதன் தலைவர் பிரபாகரனே தலைமை வகித்தார் என்று அறிவித்த ஏ. எவ். பி. மற்றும் வெரித்தாஸ் செய்தி நிறுவனங்கள், இச் சண்டையில் பிரபாகரன் காயமுற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் தகவல் வெளியிட்டன.

புலிகளின் தொடர்பு சாதனங்களை இராணுவத்தினர் ஒற்றுக் கேட்டதில் இவ்விவரங்கள் தெரிய வந்ததாக அந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏ. எவ். பி. தெரிவித்தது.

ஆனால் இச்சமரில் பிரபாகரனுக்கு காயம் ஏற்பட்டதா இல்லையா என்பதைத் தம்மால் ஊர்ஜிதம் செய்ய முடியாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

பிரபாகரன் நேரடியாகப் போரில் ஈடுபட்டதாகதான் ஒரு போதும் கேள்விப்பட்டதில்லை என்றும் அவர் சொன்னார்.

இதற்கு முன்னரும் பிரபாகரன் இறந்து விட்டார் எனவும், காயமடைந்தார் எனவும் ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளும், இந்திய அமைதிப் படையும் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலியின் தமிழ், சிங்கள செய்திகளில் அறிவிக்கப்பட்டது.

## உயிரிழப்புகளின் விவரம் தெரியாது ஆனால் தாக்குதல் முறியடிப்பு!

### அரச தரப்பு அறிவிப்பு

முல்லைத்தீவுப் பகுதியில் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் கடுமையான சண்டை நடைபெற்றது. இச் சமரில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் விவரம் இன்னமும் தெரியவில்லை.

ஆனால் முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலை பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

—இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று கொழும்பில் செய்தியாளர்களுக்கு தகவல் வெளியிடுகையில தெரிவித்தார்.

முல்லைத்தீவு முகாமின் முன்னணி பாதுகாப்பு நிலைகளை புலிகள் தாக்கினர். அரச படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

இருந்த போதிலும் புலிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐநூறு படையினர் பலி என்ற தகவலை மறுக்கின்றார் பிரிகேடியர் முனசிங்க

முல்லைத்தீவுத் தாக்குதலில் ஐநூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்த தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க மறுத்திருப்பதாக பி..பி ஸி. அறிவித்தது.

மோசமான தகவல் தொடர்பு காரணமாக ஆட்சேதம் பற்றிய தகவல்களை அரசாங்கம் கூடச் சரியாகப் பெறமுடியாது இருக்கும் போது புலிகளுக்கு மட்டும் துல்லியமாக எத்தனை பேர் என்று தெரிவது அர்த்தமற்றது என கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் பிரிகேடியர் முனசிங்க குறிப்பிட்டார்.

ஆயிரம் படையினரைக் கொண்ட இந்த முகாம் வியாழன் விடிகாலை தாக்கப்பட்டது. எத்தனை புலிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசு ஆயுதங்களை இழந்ததா? முன்னுக்குப்பின் முரணான தகவல்

முல்லைத்தீவுத் தாக்குதலில் அரச படைகளின் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர் என்ற செய்தி குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கணிசமான அளவு ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியதாக புலிகள் தமது செய்தியில் தெரிவித்திருந்தனர்.

புலிகள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள் என்று வந்த தகவல்களை கொழும்பில் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்காவால் உறுதிப்படுத்த முடியவில்லை என்று பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

''ஆள்சேதம் பற்றி தகவல் பெற அரசு முயன்று கொண்டிருக்கின்றது இப்போது ஆயுத [illegible] முடியும்'' — என்று அவர் கேட்டதாகவும் பி. பி. ஸி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கை அற்ற நிலையில் நடந்தப்பட்ட தாக்குதல்

### சரத்முனசிங்க கூறுகிறார்

''புலிகள் நம்பிக்கை இழந்த நிலையில் நடத்திய தாக்குதல் இது.''

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க முல்லைத்தீவு தாக்குதல் குறித்து இவ்வாது கொழும்பில் விமர்சித்ததாக பி.பி ஸி. அறிவித்தது.

வலுமிக்க நிலையில் இருந்து புலிகள் போரிடவில்லை என்பதையும் —

மனித உயிரிழப்புகள் குறித்து புலிகள் கவலைப்படுவதில்லை என்பதையும் —

இத்தாக்குதல் தெளிவாகக் காட்டுகிறது என பிரிகேடியர் முனசிங்க மேலும் குறிப்பிட்டார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

## ஆறாவது தாக்குதல் இது

கொழும்பு, ஜூலை 20

முல்லைத்தீவு இராணுவ முகாம் 1990 இல் நிறுவப்பட்ட பின்னர் இதுவரை அந்த முகாம் மீது விடுதலைப் புலிகள் ஓரளவு பெரிய அளவில் ஐந்து தடவைகள் 5-த்திய தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன என்றும்—

தற்போது நடத்தப்பட்டிருப்பது ஆறாவது தாக்குதல் என்றும்—

''திவயின'' சிங்கள நாளிதழ் தெரிவித்தது.

## கிளிநொச்சி ஷெல் வீச்சில் 5 பேர் பலி

மணிலா, ஜூலை 20

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மருத்துவமனையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 16 பேர் காயமடைந்ததாகவும் 'புலிகளின் குரல்' செய்தி அறிக்கையை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் வானொலி நேற்று செய்தி வெளியிட்டது.

கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வீநாயகமூர்த்தியும் காயப்பட்டவர்களில் ஒருவர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ- 3)

## முல்லை முகாம் ராணுவத் தளபதி கொழும்பில்

கொழும்பு, ஜூலை 20

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்த சமயம் முல்லைத்தீவு முகாமின் இராணுவத்தளபதி பிரிகேடியர் லோறன்ஸ் பெர்னாண்டோ கொழும்பில் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது

## தணிக்கையை அகற்றுமாறு ரணில் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 20

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் பற்றிய முழு விவரங்களையும் பொதுமக்கள் அறிய வசதியாக இராணுவ நடவடிக்கை மீதான பத்திரிகைத் தணிக்கையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய ஒய்வூதியம் பெறத் தவறிய 32 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 20 கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஓய்வூதியத்தில் சேர்ந்து, யாழ். மாவட்டத்தில் மாதாந்த ஒய்வூதியம் பெற்று வந்த 65 விவசாயிகளில் 32 விவசாயிகள் இதுவரை மே, ஜூன் மாதங்களுக்கான தமது ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்திருப்பதால் இடம்பெயர்ந்திருக்கும் பகுதியில் தமது ஓய்வூதியத்தைத் தொடர்ந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்குத் தலைவர், கமத்தொழில் காப்புறுதிச் சபை, 267 யூனியன் பிளேஸ், கொழும்பு - 2 என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று கமத் தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(இ- 4)

---

யாழ்ப்பாணப், பல்கலைக்கழகம், இலங்கை

## மாணவர் வதிவிடம்

பல்கலைக்கழக சுற்றாடலில் மாணவர்கள் தங்குவதற்கு வீடுகள்/ அறைகள் கொடுக்க விரும்புபவர்கள் பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

— பதிவாளர்

(சி-2651)

---

உ

அருள் மிகு

கொக்குவில் நந்தாவில்

### கற்புலத்து மனோன்மணி அம்பாள்

ஆலயம்

## லட்சார்ச்சனை

20-7-96 சனிக்கிழமை தொடக்கம் 29-7-96 திங்கட்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறும்.

30-7-96 செவ்வாய்க்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் லட்சார்ச்சனை பூர்த்தியும் நடைபெற்று மாலை 4 30 மணியளவில் அம்பாள் பூந்தண்டிகையில் வெளி வீதி உலா வருவார். அம்பாள் அடியார்கள் அனைவரையும் கலந்து தங்கள் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தினமும் | மாலை | 2 30 | மணிக்கு | அபிஷேகம் |
| ,, | ,, | 3.00 | ,, | அர்ச்சனை |
| ,, | ,, | 4 30 | ,, | அம்பாள் உள்வீதி |

உலா வருவார்.

ஆலய பரிபாலன சபை

கொக்குவில். (41877)

---

## கண்ணீர் அஞ்சலி

யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் திரு. இ. சிவஞானசுந்தரம் அவர்களின் தாயார் சிவபதமடைந்தமையிட்டு அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்-

ஆசிரியர்கள், மாணவர்கள்.

(41875)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 31 — 03 — 1931



மறைவு: 20 — 06 — 1996

அமரர்

### சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு

(இளைப்பாறிய தொழில் நுட்ப முகாமையாளர் - அரச மருந்துக் கூட்டுத்தாபனம்)

திதி: 20-07-1996

முன்னை நாளின் ஞாபகத்தில் நீங்கள் நாயகர் - கடின முயற்சியினால் ''வேலணையில்'' நிமிர்ந்த மன்னவர் சொந்தமென்ற சொல்லினுக்கு பொருளுமான நீர் - எம்மைத் துவள வைத்தீர் இன்று தெய்வதாளில் வாழ்கிறீர்!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

82/3, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (41876)

---

## பொலீஸாருக்கு தகவலாம்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அண்மையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாகப் பொலீஸாருக்கு பல தகவல்கள் கிடைத்திருப்பதாக 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### 1994ஆம் ஆண்டுக்குரிய கலை, வர்த்தக, முகாமைத்துவ, விஞ்ஞான, மருத்துவ, சித்த மருத்துவ பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகள் பிற்போடப்பட்டு, பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகவிருக்கின்றன.

கலை, வர்த்தக, முகாமைத்துவம்.

1. முதலாம் ஆண்டு கலை/ வர்த்தக/ முகாமைத்துவம்/ இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி/ பண்ணிசைமணி/ இசைமாணி/ நாட்டியமாணி/ பண்ணிசைமாணிப்பரீட்சைகள் 31-7-1996 இல் ஆரம்பமாகும்.
2. பொது/ சிறப்புக்கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம். பகுதி I பரீட்சைகள் 12-8-1996 இல் ஆரம்பமாகும்.
3. இரண்டாம் ஆண்டு இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி/ பண்ணிசைமணி/ இசைமாணி/ நாட்டியமாணி/ பண்ணிசைமாணிப் பரீட்சைகள் 5-8-1996 இல் ஆரம்பமாகும்.
4. சிறப்புக்கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம், பகுதி II பரீட்சைகள் 26-8-1996 இல் ஆரம்பமாகும்.
5. மூன்றாம் ஆண்டுஇசைக் கலைமணி/ நாட்டியக் கலைமணி பரீட்சைகள் 12-8-1996 இல் ஆரம்பமாகும்.

விஞ்ஞானம்

6. இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு(எழுத்துப் பரீட்சை) பரீட்சை 12-8-1996 இல் ஆரம்பமாகும்.

மருத்துவம்

7. 3 ஆம் ஆண்டு எம்.பி.பி, எஸ். பகுதி. 1 பரீட்சை 12-08-1996 இல் ஆரம்பமாகும்.
8. 2 ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ். மீள்பரீட்சை 16-8-1996 இல் ஆரம்பமாகும்.

சித்தமருத்துவம்

9. முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டுகளுக்கான சித்த மருத்துவப் பரீட்சைகள் 20-8-1996 இல் ஆரம்பமாகும்.

பரீட்சை பற்றிய விவரங்கள், அனுமதி அட்டைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் இருந்து பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

(சி/2656)

---

## NEW SCIENCE ACADEMY & NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

## 98 A|L

கணித, விஞ்ஞானப் பிரிவு

✶ எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் இணைந்த ஆசிரியர்களும்

ஆரம்பம்:- 21-07-96 SUN 8.00 A.M.

(சி/2647)

---

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### சிவயோகினி பற்குணமாணிக்கம்

(சிவாஜினி)

நாயன்மார்கட்டு செம்மணி வீதியைச், சேர்ந்த திருமதி சிவயோகினி பற்குணமாணிக்கம் 19-7-96 அன்று அகால மரணம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற நீதிவான் A. W நடராஜா சிவானந்தம் அவர்களின் அன்பு மகளும் தியாகராஜா பற்குணமாணிக்கத்தின் அன்பு மனைவியும் தக்ஷாயணி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆண்டு 13 வர்த்தகம்)அவர்களின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-7-96சனிக்கிழமை மாலை 3.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ப. தக்ஷாயணி
(மகள்)

228, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு. (41883)

### சரவணமுத்து கார்த்திகேசு

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சரவணமுத்து கார்த்திகேசு (இளைப்பாறிய தபால் ஊழியர்) 05-04-96இல் காலமானார். இவர் சரவணமுத்து தம்பதிகளின் புதல்வரும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், சத்தியகுமார் (கனடா), காலஞ்சென்ற சந்திரகுமார், நந்தகுமார் (டென்மார்க்), சிவகுமார், (ஜேர்மன்), சரஸ்வதி, கனகரசி, ஆகியோரின் தகப்பனாரும் கெங்காதேவி (கனடா), ராஜலக்ஷ்மி (டென்மார்க்), கனகரத்தினம் (ஜேர்மனி), பாலகிருஷ்ணன் (ஜேர்மன்), ஆகியோரின் மாமனாரும், சன்ரானா, ஜனா, தனுசா, கௌசி, கபிலன், ஆகியோரின் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
க. நடராசா (ஆசிரியர்)
(மைத்துனர்)

89/7, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (41864)

### செல்லையா இராஜவரோதயம்

(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்)

இராஜவரோதயம் காலமானார். அன்னார் அமராவதியின் அன்புக் கணவரும், வத்சலா (Canada), மிதிலகுமாரி (U.K.) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆனந்தகுமார் (U.K.) அவர்களின் மாமனாரும், விமலோதயம், திருமால், உமாபதி ஆகியோரின் சகோதரரும் சட்டத்தரணி பத்மநாதனின் மைத்துனரும் நிரேஷின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை 21-7-96 ஞாயிறு காலை 9.00 மணியளவில் சித்துப்பாத்தி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி அ. இராஜவரோதயம்
(மனைவி)

14, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (41881)

### ஆன்சிந்துஜ கலிஸ்ரஸ்

செல்வி ஆன்சிந்துஜ கலிஸ்ரஸ் காலமானார்.

இவர் ஜோசப் கலிஸ்ரஸ் (I.C.R.C), ஜெசிந்தா கலிஸ்ரஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அருமைப் புதல்வியும், செல்வன் ஜெறிபிறண்டனின் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) அன்புத் தங்கையும், திரு. திருமதி நிக்கிலாப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற ஜோசப், அன்னம்மா (பிள்ளை அக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 72 A றக்கா வீதி இல்லத்தில் இருந்து இன்று பி.ப 3.30 மணிக்கு புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஜோசப் கலிஸ்ரஸ்
(தகப்பன் - I.C.R.C)

(41882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன – இஸ்ரேல் எல்லையை மீண்டும் திறக்க புதிய பிரதமர் முடிவு

## 10 ஆயிரம் பாலஸ்தீனருக்குதிரும்பவும் வேலை வாய்ப்பு

லண்டன், ஜூலை. 20

பாலஸ்தீன தன்னாட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடையுத்தரவுகளை தளர்த்தும் திட்டம் ஒன்றைப் பற்றிய விவரங்களை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தான்யகோ அறிவித்துள்ளார்.

ஐந்து மாதங்களாக மூடப்பட்டுள்ள பாலஸ்தீன தன்னாட்சிக்கு உட்பட்ட பகுதிகளைத் திறக்க ஆரம்பிக்கப் போவதாகவும்—

பத்தாயிரம் பாலஸ்தீன தொழிலாளர்களையும் இஸ்ரேலுக்குள்அனுமதிக்கப்போவதாகவும்— அவர் தெரிவித்தார்.

வேலை வாய்ப்புக்காக பாலஸ்தீனர்கள் தினமும் இஸ்ரேலுக்குள் சென்று வருவது வழக்கம்.

இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் லெவி பாலஸ்தீனர்களின் தலைவர் அரபாத்தை சந்திப்பார்எனவும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்தார்.

எகிப்தில் ஜனாதிபதி முபராக்குடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும் நெத்தான்யகோ அங்குவைத்து இந்த அறிவிப்புக்களை விடுத்தார்.

இஸ்ரேல் பிரதமருடனான முதல் சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் பின்னர் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுக்கள் தொடரும் என தாம் நம்புவதாக ஜனாதிபதி முபாரக் கூறியுள்ளார்.

இவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஏற்கனவே பாலஸ்தினர்களுடன் கைச்சாத்திட்ட அமைதி உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு இஸ்ரேல் உறுதி எடுத்துள்ளது என்று நெத்தான்யகோ தெரிவித்தார்.

(இ-3)

## ரஷ்ய போர் விமானங்கள் செச்சின்யாவில் குண்டுவீச்சு

செச்சின்யாவில் பிரிவினைவாத கிளர்ச்சிகளுக்கு எதிராக தொடரும் தமது தாக்குதலில் வட–கிழக்கு செச்சின்யாவின் மலைப்பகுதி கிராமங்கள் மீது ரஷ்ய போர் விமானங்கள் பெரும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன

செச்சின்யாவில் கடும்போக்கு உடைய அணுகுமுறையை ரஷ்யா ஏற்றுக் கொண்டு விட்டதற்கான அறிகுறிகள் தென்படுவதாக மாஸ்கோவில் உள்ள பி. பி. ஸி செய்தியாளர் கூறுகிறார்.

அண்மையில் ரஷ்யர்கள் நடத்தும் தாக்குதலுக்கு முழு அளவிலான பதிலடியை கொடுப்பதில்லை என முடிவு எடுத்துள்ளதாகவும்—

அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கான வழிவகைகள் இருக்கின்றன என தாம் கருதுவதாகவும் — கிளர்ச்சிக்காரர்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ 3)

## ஜெயலலிதா பாதுகாப்பு: பிரதமர் மறு பரிசீலனை

சென்னை, ஜூலை 20

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு கொடுக்கப்பட்டு வந்த தேசிய பாதுகாப்புப் படையின் பாதுகாபபை விலக்கிக் கொள்ளும் அரசின் உத்தரவை தாம் மறுபரிசிலனை செய்ய விருப்பதாக பிரதமர் தேவகௌடா உறுதி அளித்துள்ளார்.

மாநிலங்கள் அவையில், கேள்வி நேரத்தின் பின்னர், உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு' பதில் அளித்த அவர், உள்துறை அமைச்சகம் வழக்கமாக செய்து வரும் பாதுகாப்பு ஆய்வின் போது இவருக்கான பாதுகாப்பு விலக்கப்பட்டிருக்கக்கூடும் என்றார்.

அ. தி. மு. க உறுப்பினர் ஆர். கே. குமார் இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பி 'இருந்தார்.

விடுதலைப் புலிகள் மற்றும் தீவிரவாத அமைப்புக்களினால் ஜெயலலிதாவுக்கு பெரும் அபாயம் இருப்பதாக அவர் கூறினார்

பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களின் அவை எதிர்க்கட்சித் தலைவர் சிக்தன்தரபத் காங்கிரஸ் (ஐ) உறுப்பினர் மார்கிரட் ஆல்வா ஆகியோரும் ஜெயலலிதாவுக்கு தேசிய பாதுகாப்பு படையின் பாதுகாப்பு மீண்டும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். (இ-3)

# இஸ்லாத்தின் மண்ணில் அந்நிய இராணுவமா?

## சவூதி மீது ஈராக் தலைவர் கண்டனம்

மணிலா, ஜூலை 19

அந்நியப்படைகளைத் தங்கள் நாட்டுக்கு வரவழைத்து இஸ்லாத்தின் புனித தலங்கள் இருக்கின்ற மண்ணை அழிக்க முற்படுபவர்கள் அல்லாஹ்வின் சாபத்தில் இருந்து தப்பமாட்டார்கள் என்று ஈராக் அதிபர் சதாம்ஹுசே யின் சவூதி அரேபியாவை மறைமுகமாகத் தாக்கியுள்ளார்

அத்தகைய அரபு நாடுகளின் ஆட்சியாளர்களைத் தூக்கி எறியவும் மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

சவூதி அரேபியாவின் பாதுகாப்புக்காக சவூதிஅரேபியாவில் அமெரிக்கா பெருமளவு படையினரை வைத்திருக்கிறது.

குவைத் மீதான ஈராக்கிய படையெடுப்பை அடுத்து சவூதி அரேபியாவுக்கும் ஈராக்குக்கும் இடையிலான உறவு சீர் குலைந்திருப்பது தெரிந்ததே.

(இ-3)

# உலக அரங்கில்

## இஸ்ரேல் அமைச்சர் அரபாத்தை சந்திப்பார்

பாலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தை விரைவில் சந்திப்பதற்கு தாம் ஆயத்தமாகி வருவதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவி நேற்றுந் தெரிவித்தார்

தமது அரசாங்கம் சகல சமாதான உடன் படிக்கைகளையும் மதித்து நடக்கும் என்றும் —

அரபாத்தைச் சந்திப்பதற்கான ஆயத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த சில வாரங்களில் அல்லது சில நாள்களில் கூட இந்த சந்திப்பு நிகழலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய வானொலிக்கு பேட்டியளித்த அவர் பிரதமர் பெஞ்சமின் நெத்தினியாகுவின் அரசாங்கம் மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் தொடர்வதை உறுதிப்படுத்தும் என்றும் —

இஸ்ரேலின் முன்னைய அரசாங்கம் அரபு நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மதித்து நடக்கும் என்றும் தெரிவித்தார்.

(இ-4)

## காஷ்மீரில் தேர்தல்:

# ஐ. நா. மேற்பார்வையில் நடந்தால் பிரிவினைவாதிகளும் பங்கு பற்றுவர்

லண்டன், ஜூலை 20

இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் மாநில சட்ட சபைத்தேர்தல்கள் ஐ. நாவின் மேற்பார்வையில் நடைபெற்றால், அதில் போட்டியிட தாம்தயார் என பல பிரிவினைவாதக் குழுக்களின் கூட்டமைப்பான அனைத்துக் கட்சி குரியத் மாநாடு தெரிவித்துள்ளது.

ஜம்முவிலும், காஷ்மீரிலும் தேர்தல்கள் நடத்தப்படுவதை தாம் கொள்கை அளவில் எதிர்க்கவில்லை என்று அந்த அமைப்பின் இரண்டு மூத்த தலைவர்களான அப்துல்கானி, சைட் அலிஷா கிலானி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

செப்டம்பரிலோ, அல்லது ஒக்டோபரிலோ நடக்கும் தேர்தல்களில் மோசடிகள் செய்ய இந்திய அதிகாரிகள் எண்ணுகிறார்கள் எனவு அவர்கள் கூறினர்.

தேர்தல்களில் தாம் வென்றால் காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் இணைந்திருப்பதை இல்லாமல் செய்வதே தமது நோக்கமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (இ-3)

## அச்சுவேலியில் மீன்விலை அதிகரிப்பு

அச்சுவேலி ஜூலை20

அச்சுவேலி பொதுச்சந்தையில் மீன்வகைகளை நிறுத்து விற்பனை செய்யுமாறு பாவனையாளர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அச்சுவேலிமீன் சந்தையில் மீன்வகைகள் நிறுத்து விற்பனை செய்யப்படாமல் கூறு வைத்து விற்கப்படுவதால் 1 கிலோ மீன் 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

## வைத்தியசாலைகள் சரிவர இயங்க முடியாத நிலை

### டாக்டர்கள் பற்றாக்குறை காரணம்

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அரசினர் வைத்திய சாலைகளில் ஏற்பட்டுள்ள டாக்டர்கள் பற்றாக்குறையினால் வைத்திய சாலைகளை முழு அளவில் இயங்க வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது அச்சுவேலி, கோப்பாய், அளவெட்டி வைத்திய சாலைகளில் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுகள் மட்டுமே இயங்குகின்றன.

இந்த வைத்திய சாலைகளை முழுமையாக இயங்க வைப்பதற்கான டாக்டர்கள் தேவை என விளம்பரப்படுத்தப்பட்ட போதும் டாக்டர்கள் எதிர்பார்த்தளவு விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது:

வெளிஇடங்களில் அரசினர் வைத்திய சாலைகள் சரிவர செயற்பட ஆரம்பிக்காததால்தூரஇடங்களில் இருந்து நோயாளிகள் பலர் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வரவேண்டி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இ-4

## இப்படியும் நடக்கிறது!

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தூயகணித பாடத்தில் சித்தி பெறத்தவறியதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த மாணவர் ஒருவர் மீள் பரீசீலனைக்கு விண்ணப்பித்த போது அப்பாடத்தில் அதிவிசேட (ஏ) சித்தியை பெற்றுள்ளார்.

இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை சேர்ந்த சிவேந்திரன் சிவாகரன் என்பவரே இவ்வாறு சித்திபெற்றவராவார்.

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து தோற்றிய அம் மாணவனுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்த போது மூன்று பாடங்களில் 2 பி, சி சித்திகளும் தூயகணிதத்தில் சித்தியின்மையும் அடைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப மாணவர் மேற்படி சித்தி பெறத்தவறிய பாடத்துக்கு மீள் பரீசீலனைக்கு விண்ணப்பித்ததாகவும்—

மீள் பரீசீலனை முடிவுகள் வந்த போது அவர் அப்பாடத்தில் அதிவிசேட சித்தியைப் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ–152)


உ

அளவெட்டி தெற்கு வெளிவயல்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய

வருடாந்த மஹோற்சவம்

மேற்படி ஆலயத்தின் உற்சவம் **20-07-96** இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறும். பத்தாவது நாள் **29-07 96** அன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்உற்சவம் நடைபெறும். **30-07-96** காலை 7மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். **31-07-96** மாலை பூங்காவன உற்சவத்துடன் மஹோற்சவம் இனிதே நிறைவெய்தும்என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி.

| திருவிழா | நேரம் |
|---|---|
| காலை | மாலை |
| 08 — 12 | 03 — 06 |

தர்மகர்த்தா சபையினர்

(41855)


## கூட்டணி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 20

நீதி, அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சு நடத்தி உள்ளது.


விநாயகர் துணை

சாவகச்சேரி சப்பச்சிமாவடி

விநாயகர் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவம் - 1996

| | | |
|---|---|---|
| 21 - 07 - 1996 | — | கொடியேற்றம் |
| 27 - 07 - 1996 | — | வேட்டைத் திருவிழா |
| 28 - 07 - 1996 | — | சப்பறம் |
| 29 - 07 - 1996 | — | தேர் |
| 30 - 07 - 1996 | — | தீர்த்தம் |
| 31 - 07 - 1996 | — | வைரவர் சாந்தி |

அனைவரும் வருக

ஆலய தர்மகர்த்தாவும்,
உபயகாரர்களும்

20-07-1996

(41853)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

அச்சகமொன்றிற்கு பயிலுனர்கள் தேவை. நேரில் வரவும். 233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கு அருகில்) (41865)

## மீண்டும் இயங்குகிறது

மீண்டும் யாழ் நகரில் புதிய தமிழ் வீடியோ படங்களை ஒறிஜினல் பிரதி மூலம் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்: றீகல் வீடியோ மூவிஸ், ஈச்ச மோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (மினி சினிமாக்காரர்களுக்கு ஒறிஜினல் கொப்பி தரப்படும்.) (41797)

20. 4. 96 அன்று ஜனார்த்தனன் என்ற லான்ட் மாஸ்ரரில் மீசாலையிலிருந்து கச்சாய் ஊடாகக் கொடிகாமத்திற்குச் சென்ற போது ஆடைகள் கொண்ட உரப்பை மூடை ஒன்றும், சில பொருள்களும் தவறி விட்டன. கண்டெடுத்து வைத்திருப்போர் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். எஸ். பத்மநாதன், ''சிவபதி'' சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி, (41813)

## நாவல் கொள்வனவு

பாவித்த நல்ல நிலையில் இருக்கும் தமிழ் நாவல்கள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்ளவும் க. உமாசுதன், 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (41854)

## O/L கணிதம்

Distinction; Credit பெறுபேறடைய இதுவரையும் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி (41807)

## காணவில்லை

எனது சிவப்பு நிறமுன் வளைந்த கொம்புடைய யேசி இன பெரிய பசுவை கடந்த வாரம் முதல் காணவில்லை. சிலர் பிடித்துள்ளதாக அறிகின்றேன். கண்டவர்கள் தயவு செய்து அறிவிக்கவும். கவர்ச்சிகரமான சன்மானம் தரப்படும். பொ. சற்குரு, பெருமாள் கோவில் பின் வீதி, யாழ்ப்பாணம். (41848)

## ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசப்பயில ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சிறு குறுப்பாக மட்டும்) (41815)

## மணமக்கள் தேவை

யாழ் இந்து வேளாள பெற்றோர், 41 வயது, பரணி, கணக்காளர் மகனுக்கும், 36 வயது A/L படித்த ரோகிணி, செவ்வாய் 7 நட்பு மகளுக்கும் மணமக்கள் தேடுகின்றார்கள். மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். முழுவிபரங்களும் குறிப்புகளும் அனுப்பவும். இல. 504, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (41849)

## உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வர்டகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் வைற் கவுஸ் அருகில் 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

## O/L MATHS 96

30 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து சகல Sectionகளும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section & Portion Revison உடன் Past Papers Practiceம் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (41749)

## கணிதம்

ஆண்டு 11 ம்ற்றும் ஆண்டு 10 மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் தனியாக வினா விடை வகுப்புகளுக்கும் தொடர்பு கொள்ளலாம். இல:- 502 மே/பா உதயன் பணிமனை நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (41824)

## WANTED

Wanted Immediately a Visiting Lecturer in Computer Qualification: Degree/ Bcs/ Higher Diploma. Excellent Salary and Carrier Prospects. Walk in interview on 21 and 22 July between 9 a.m to 11 a.m at: Institute of Informatics Studies No:- 68 Clock-Tower Road Jaffna. (41804)

## BRIGHTON INSTITUTE

சகல பாடங்களுக்குமான 6 – 11ம் ஆண்டுகளுக்கான வகுப்புகள் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவால் நடத்தப் பெறுகிறது. Maths அடிப்படையிலிருந்து சிறந்த பேறுபெற கற்பிக்கப்படும், FLETCHERS LANE Chundikuli, Jaffna (41733)

## இசை வகுப்புகள்

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு அமைய வித்துவான் பிரம்மஸ்ரீ மோகன் சர்மா அவர்களால் வயலின், மிருதங்க வகுப்பு நடத்தப்படும். புதிதாக சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க. நித்தியானந்தன், மானிப்பாய் வீதி, 1ம் கட்டையடி, உடுவில். (41842)

## மீண்டும் ஆரம்பம்

சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம் 568 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சகல விதமான மணிக்கூடுகளும் திருத்திக் கொடுக்கப்படும். (41732)

## கணிதம்

ஆண்டு 7 முதல G C. E. (O/L) வரை மாணவர்களுக்கு திறமைமிக்க ஆசிரியரினால் வீட்டிற்கு வந்து கணிதம் கற்பிக்கப்படும். தொடர்பு: புதிய இல. 192, கச்சேரி – நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41860)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

த. தி

(41866)

## ஆடிப்பூர விழா

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர விழா காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை வெகுசிறப்பாக நடைபெறும்.

(41868) உபயகாரர்

## மெதடிஸ்த திருச்சபை

யாழ்ப்பாணம்

மெதடிஸ்த திருச்சபையின் பரி. பேதுரு ஆலயத்தின் ஞாயிறு ஆராதனை **21-07-96** ஞாயிறு முதல் மீண்டும் ரீம்மர் மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

காலை **8** மணிக்கு (பழைய நேரம்) ஆராதனை ஆரம்பமாகும்.

முகாமைக்குரு

அருட்திரு. எஸ். எஸ். கருணைராஜ்

(சி/2648)

## யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தினால் மாதாந்தம் 3ஆம் ஞாயிறு நடைபெறும் ஐக்கிய ஆராதனை திருவிருந்து ஆராதனையாக 21 07-96 ஞாயிறு மாலை 3-00 மணிக்கு (பழைய நேரப்படி) யாழ். நகரப்பணி (City mission) ஆலயத்தில் நடைபெறும். யாவரும் அன்பாக அழைக்கப்படுகின்றீர்கள். இறை செய்தி வழங்குபர் வண. S நித்தியானந்தன்.

வண. S மில்ரன்

செயலாளர்.

(41867)

## QUICK PHOTO

### மீண்டும் யாழ். நகரில் ஆரம்பம்

மணிக்கூட்டு வீதி, யாழ் நகரில் இருந்த எமது ஸ்தாபனம் கீழ்க் காணும் முகவரிகளில் தற்காலிகமாக இயங்குகின்றது.

கலர்ப்படச் சுருள்களை கழுவ விரும்புபவர்களும், எமது வாடிக்கையாளர்களும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அஜந்தா**
போட்டோ & வீடியோ,
63, சங்கிலியன் வீதி.
நல்லூர்.


**தவமணி**
மான் ஸ்கூல் லேன்,
உடுவில்.


(41857)

## காணவில்லை

யாழ்ப்பாணம் - நல்லூரை (கல்வியங்காடு) வதிவிடமாகக் கொண்ட எனது மகன் க. பாணீதரன் அவர்களை, நாங்கள் மீசாலையில் இடம்பெயர்ந்து இருந்த போது 18 – 04 - 96 அன்றில் இருந்து காணவில்லை. அவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து எங்களுக்கு அறியத் தரவும்.

இ. கனகரத்தினம்,
V. R. K. மில்,
364, பருத்தித்துறை வீதி,
(கல்வியங்காடு) நல்லூர்,
யாழ்ப்பாணம். (41863)





## மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!

செவ்வாய், வியாழன், சனி

காலை 8. 30 தொடக்கம் பகல் 12. 30 வரை

யாழ் வீதி நெல்லியடி.

(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும் மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

# லாவண்யா

## பல் மூக்குக் கண்ணாடி அகம்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்

(சி-2643)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி

### குணசிங்கம் யோகாதேவி (யோகி)

தோற்றம்: **29–07–64** மறைவு: **19–04–96**

திதி: 20 — 07 — 96

மாசற்ற மனையாளே மலர் உள்ளம் கொண்டவளே
மீளாத் துயரில் ஆழ்த்தி மேலுலகம் சென்றதென்ன
மாதங்கள் மூன்றானாலும் மனமின்னும் ஆறவில்லை
மீண்டிங்கு வாராயோ மகிழ்ந்தென்னைப் பாராயோ.

இந்நாளில் உன் அக்காவையும், மகனையும் நினைவு-கூருகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்-பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்,
கணவன், உறவினர்கள்

மடத்துப்புலம்,
கரணவாய், மேற்கு,
கரவெட்டி

(41777)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மீண்டும் அதே நிலை

இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு முறையை மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்தை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கிறது.

தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கைப் பிரித்து விடுவது சந்திரிகா அரசின் முடிவு. தமிழர் தாயகத்தில் இருந்து கிழக்கைப் பிரித்து விட வேண்டுமா இல்லையா என்பதனை அறிவதற்கு, இறுதியும் அறுதியுமாக முடிவு செய்வதற்கு, கிழக்கில் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

தென்னிலங்கையின் பிரதான அரசியல்கட்சிகளான — மாறி மாறி ஆட்சிபீடத்தில் அமரும் கட்சிகளான — ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர் விவகாரத்தில் மாறி மாறி எதிரும் புதிருமாகச் செயற்படுவது ஒன்றும் புதியதல்ல.

இரண்டு கட்சியினருமாகச் சேர்ந்து தமிழர்களின் பிரதான பிறப்புரிமைகளை வழங்காமல் தள்ளிப் போடுவதிலும் அவர்களை அடக்கி ஒடுக்குவதிலும் மிக ஒற்றுமை காட்டி வெற்றி கண்டிருக்கிறார்கள்.

வடக்கு — கிழக்கு தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; அங்கீகரிக்கப்பட வேண்டும்; அதன் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கான எந்த அரசியல் தீர்வும் அமைய வேண்டும் என்பதே தமிழர்களின் நீண்ட காலக் கோரிக்கை.

ஆனால், வடக்கு — கிழக்கு இணைப்பு இடம் பெறமுடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தம்மிடம் கூறியதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

தமிழர் தலைவர் தந்தை செல்வநாயகமும், தமது தந்தையார் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்காவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தமது அரசியல் தீர்வு அமையும் என்று பேசி வரும் சந்திரிகா —

தமிழர் தாயகக் கோட்பாட்டை உடைத்துவிடும் முயற்சியில் இப்போது ஒன்றிணைந்துள்ள வடக்குக் கிழக்கைப் பிரித்துவிட முடிவு செய்திருக்கிறார்!

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், அவர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சி அமைப்பு நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதனை மூழு மூச்சோடு எதிர்க்கிறது

அரசமைப்புச் சட்டத்தில் இருந்து ஒற்றையாட்சி முறை நீக்கப்பட வேண்டும் என்று கூறியதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளரும், கொழும்பு மேயருமான திரு. கணேசலிங்கத்திடம் விளக்கம் கோரப்பட்டிருக்கிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று உடனடியாகக் காணப்படும் என்று எண்ணமுடியுமா.

தமிழர் உரிமைகளை வழங்குவதற்கு கடந்த சுமார் ஐம்பது வருடங்களாக தெற்கின் இரு பிரதான கட்சிகளும் எவ்வாறு தடையாக இருந்தனவோ அதே நிலையே இப்போதும் தோன்றியுள்ளது.

## சமய நிகழ்வுகளில்

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகின்றது. (இ-11)

வட்டுக் கோட்டை தெக் கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் தேவஸ்தான ஆடிப்பூர நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று நடைபெறவிருக்கிறது

திருவீதியுலாவும், திருவூஞ்சலும் நடைபெறும். (இ-3)

## கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

இப்பகுதிகளிலுள்ள பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்பி வராததினால் அவர்களால் கைவிடப்பட்ட மாடுகளே இவ்வாறு கூட்டம் கூட்டமாக வீட்டு வளவுகளுக்குள்ளும் தோட்டங்களுக்குள்ளும் புகுந்து பிரயோசனங்களை அழித்து வருகின்றன. (இ-100)

# நெருப்புக் காய்ச்சல் பரவுகிறது
# வலிகாமம் பகுதியில் பலர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலிகாமம் பகுதியில் தற்போது நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டவர்களே அதிகமாக உள்ளனர். அதிலும் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப் பட்டோர் எழுபத்தைந்து வீதமானோராவர்.

தற்போது வைத்திய விடுதிகளில் தங்கியிருக்கும் மொத்தம் 125 வைத்திய நோயாளிகளில் சுமார் 50 பேர் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப் பட்டவர்கள் ஆவார்.

மேலும் மலேரியா, செங்கண்மாரி போன்ற நோய்களினாலும் மக்கள் பாதிக்கப் பட்டுவருகின்றனர்.

அதேசமயம் செப்ரிசீமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒரு பெண் குழந்தை மரணமானது.

யாழ்ப்பாணம் றக்கா வீதியைச் சேர்ந்த கலிட்டஸ் யோசப் ஆன் சிந்துஜா (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்ததாகும். (இ-15)

## விசேட அடையாள அட்டை: 5,000 வந்து சேர்ந்தன

நவாலி, ஜூலை. 20

யாழ் மாவட்டத்திலிருந்து விசேட அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 5000 பேரின் அடையாள அட்டைகள் யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மூலம் விண்ணப்பித்தவர்கள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்குச் சென்று அவற்றை பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் 4 ஆயிரத்து 500 தேசிய அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து இத் திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இவற்றையும் பிரித்து உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-100)

## ஆளுநருடன் ஈ. பி. டி. பி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 20

வடக்கு— கிழக்கு மாகாண சபையின் நிர்வாக சீர்கேடுகள் குறித்து ஆளுநர் காமினி பொன் சேகாவுடன் ஈ. பி. டி. பி குழு ஒன்று பேச்சு நடத்தி உள்ளது என கொழும்பு பத்திரிக்கை செய்தி தெரிவிக்கிறது. (இ-3)

## கமநல சேவை நிலையத்தில் கிருமிநாசனி விநியோகம்

வலிகாமம் தெற்கு ஜூலை 20

தோட்டச் செய்கையாளர்களுக்குத் தேவையான றிப்போன், லெப்பசிற், டெம்றோ, மங்கோசெற் போன்ற கிருமிநாசனி வகைகள் உடுவில் கமநல சேவை நிலையத்தினூடாக தற்போது வழங்கப்பட்டு வருவதாக அதன் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆயிரம் விவசாயிகளை உள்ளடக்கிய துரித விவசாயத் திட்டத்தின் கீழ், கடந்த வாரங்களில், வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள 650 விவசாயிகளுக்கு சராசரியாக ஐந்து அந்தர் இலவச விதை வெங்காயம் வழங்கப் பட்டதாகவும்—

புலோலி கமநல சேவை நிலையத்தில் இருந்து மிகக் கூடிய தொகையாக 3, 530 அந்தர் விதை வெங்காயம் பெறப்பட்டு இப்பகுதி தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவா, கரட், பீற்றூட், டுபாய் பூசணி, கீரை, புடலங்காய், போஞ்சி, பாகற்காய், கத்தரி விதைகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும்—

பயிர்ச்செய்கையாளருக்கு முதலாம் கட்டமாக தலா பத்து லீற்றர் மண்எண்ணெய், உரவகைகளான ரி. டி. எம். வி. ஆகியன வழங்கப் பட்டதாகவும்—

விரைவில் இரண்டாம் கட்டமாக மண்எண்ணெய் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-152)

## தீவுப் பகுதி ஆஸ்பத்திரிகள் முழுமையாக இயங்கும்

தீவுப்பகுதிகளில் இருக்கும் அனைத்து ஆஸ்பத்திரிகளும் இன்னும் ஒருமாத காலத்தில் முழுமையாக இயங்கும் என யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பகுதியின் நிர்வாக அதிகாரியினால் தெரிவிக்கப் பட்டது.

அந்த ஆஸ்பத்திரிகளில் சிலவற்றில் தற்போது நிலவி வரும் டாக்டர்கள், தாதியர், மற்றும் ஏனைய ஊழியர்களின் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி தற்போது முழுமையாக இயங்குவதாகவும், தெரிவித்தார்.

டாக்டர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் சிலவைத்தியசாலைகளில் இரண்டு வைத்திய சாலைகளுக்கு ஒரு டாக்டர் கடமை புரியவேண்டி வரலாம் எனவும் தெரிவிக்கப் பட்டது. (இ-15)

## காலபோகத்துக்கான விதை நெல் விநியோகம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 20

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு எதிர்வரும் காலபோகத்துக்கு தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொடுக்க யாழ்ப்பாணம் விவசாயத்திணைக் களத்தினர் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்பகுதியில் இருந்து தேவையான விதை நெல் பெறப்பட்டு எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னர் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களூடாகவும் வழங்கப்படும்.

இதற்கமைய விதை நெல் தேவையான விவசாயிகள் தாம் பயிர்செய்ய இருக்கும் காணிப்பரப்பு, தேவையான நெல்லின் இனம், தேவையான அளவு ஆகியவற்றைக் குறித்து தத்தம் பகுதி கிராம சேவையாளர்களிடம் உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு உடுவில் கமநல சேவைநிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார் (அ-152)

# இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மீள அறவிடாத பணம் பல கோடி

## நாடாளுமன்றில் பெயர் அறிவிக்க வங்கிச்சட்டம் திருத்தம்

கொழும்பு, ஜூலை 20

இரண்டு அரசாங்கதுறை வங்கிகளில் இருந்தும் கடன் பெற்றவர்கள் பலர் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறி உள்ளனர். இப்படித் திருப்பிச் செலுத்தப்படாத பணம் பல கோடி ரூபா ஆகும்.

கடந்த புதனன்று அமைச்சரவை தீர்மானங்கள் பற்றி செய்தியாளர்களுக்கு விளக்கிக் கூறிய அமைச்சர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி இந்த விடயம் பற்றி விசேட கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன கடனை மீளப் பெறுவதில் ஏற்படும் முக்கிய தடங்கல், தற்போதைய வங்கியின் இரகசிய சட்டங்களாகும்.

கடனை திருப்பிச் செலுத்த தவறிய தனி நபர்கள் மற்றும் கம்பனிகள் பற்றிய விவரங்களை வெளியிடும்படி அரசாங்கத் தரப்பையும் எதிர்த்தரப்பையும் சேர்ந்த நாடாளுமன்ற அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்தில் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

எவ்வாறாயினும் தற்போதைய வங்கி இரகசிய சட்டங்கள் காரணமாக விவரங்களை வெளியிட முடியாதுள்ளது.

அரசாங்கம் இந்த சட்டத்தை நீக்கி கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் பெயர் விவரங்களை நாடாளுமன்றில் வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இதற்குத் தடையாக இருந்துவரும் குறிப்பிட்ட இரு வங்கிச் சட்டங்களைத் திருத்தும்படி சட்டமா அதிபர் கேட்கப்பட்டுள்ளார்; இந்த திருத்தங்கள் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

1995ஆம் ஆண்டுவரை இலங்கை வங்கிக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை 289 கோடி ரூபாவாகும். மக்கள் வங்கியைப் பொறுத்த மட்டில் ஜூலை மாதமளவில் 10 வாடிக்கையாளர்கள் 414 கோடி ரூபாவைச் செலுத்தத் தவறியுள்ளார்கள்.

சில சந்தர்ப்பங்களில் தேவைப்படும் அளவு அசையாத சொத்துக்கள் அடைமானமாக வைக்கப்படாமல் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் கூறினார்.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாது கடன் வழங்கிய வங்கி அதிகாரிகள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்ற கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

அவ்வாறாயினும் மேலிடத்து உத்தரவின் பேரில் இந்தக்கடன்கள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். (இ-4)

## சமயாசமய ஊழியர் சம்பளம் அதிகரிப்பு

அரசாங்கத்துறை சமயாசமயஊழியர்களின் நாளாந்த சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அதிகரிப்பு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டுமென்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆர். எஸ். ஜெயரட்ண சகல அமைச்சு செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தொழிலாளர்கள் எழுதுவினைஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், காவலாளிகள், சிற்றூழியர்கள் ஆகிய தரங்கள் உட்பட 28 வகையான ஊழியர்கள் இந்த சம்பள அதிகரிப்பினால் நன்மை அடைவார்கள். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழப்புக்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) ளின் குழு ஒன்று முகாமுக்குள் நுழைந்து தொலைத் தொடர்பு சாதனத்தை அழித்து விட்டது.

விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் உதவியுடன் மேலதிக துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு முகாமை பாதுகாப்புப் படையினருடன் சேர்ந்து கடற்படையினரும், விமானப்படையினரும் பொலீஸாரும் மிக உறுதியுடன் பாதுகாத்தனர்.

இராணுவத்துக்குக் கிடைத்த தகவலின்படி, முகாமில் இருந்த பெரும் எண்ணிக்கையான அரச படையினர் பாதுகாப்பாக இருக்கக் கூடும்

ஆனால் இந்தச் சண்டையின் போது புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.

— இவ்வாறு பிரிகேடியர் சரத் முனசிங்க மேலும் தெரிவித்தார்.

### புலிகளின் தகவல்

மூன்று பக்கங்களில்கடலால் சூழப்பட்டு நான்காவது பக்கத்தில் தரையைக் கொண்டுள்ள இந்த முகாம் மீது வியாழன் அதிகாலை 12.10 மணியளவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் தாக்குதலை நடத்தி ஊடுருவி முகாமின் மையப் பகுதி வரை முன்னேறியதாக புலிகளின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான சண்டைக்குப் பின்னர் கடற்கரைப் பாதுகாப்பு வலயங்களும் முகாமும் தமது கட்டுப்பாட்டில் வந்ததாகவும் —

இச்சண்டையில் ஐநூறு இராணுவத்தினரும் நாற்பது புலிகளும் உயிரிழந்ததாகவும்-

புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இராணுவத்திடமிருந்து கணிசமான அளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அக்குறிப்பு தெரிவித்தது என்று பி.பி.ஸி. அறிவித்தது

## ஐந்நூறு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) தாக்குதலில் ஈடுபட்டனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பாதுகாப்புப் படைகள் எந்நேரமும் ஆயுத நிலையிலேயே இருந்ததால் எதிர்பாராத நேரத்தில் இத்தாக்குதல் திடீரென மேற்கொள்ளப்பட்டது என்று கூறமுடியாது.

படைகள் தயார் நிலையில் இருந்ததால் ஐநூறு படையினர் உயிரிழந்தனர் என்று புலிகள் கூறுவது கேலிக்குரியது.

இப்போது முகாம், படையினரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கிறது.

கடந்த 13 வருடப் போரில் நடந்துள்ள மாபெரும் தாக்குதல்களில் இதுவும் ஒன்று. — இவ்வாறு பிரிகேடியர் முனசிங்க மேலும் கூறியதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

## அரசு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) குறிப்பிட்டது.

ஆனால்— நேற்று முன்தினம் ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை என்று சரத் முனசிங்க கூறியதாக தூரதர்ஷன் நேற்றிரவு அறிவித்தது.

ஆனால் மூன்று கவசவாகனங்கள் உட்பட பல வாகனங்கள், 122 மி.மீற்றர் பீரங்கிகள் இரண்டு சுடுபடைக் கலங்கள் மற்றும் அதி நவீன ஆயுதங்கள் என்பவற்றை புலிகள் எடுத்துச் சென்றனர் என்று வெரித்தாஸ் வானொலியின் தமிழ், சிங்களச் செய்திகளில் அறிவிக்கப்பட்டது.

## தணிக்கை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) அகற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இந்திய வானொலி இத் தகவலைத் தெரிவித்தது.

(உ-3-10)

# இராணுவ விஸ்தரிப்புக்கு உதவும் என்பதால் இலக்காக அமைந்தது

## லோறன்ஸ் திலகர் கருத்து

லண்டன், ஜூலை 2!

முல்லைத்தீவு முகாம் இராணுவ விஸ்தரிப்புக்கு வழி செய்யும் என்பதால் அது தாக்கப்பட வேண்டிய ஓர் இலக்காக இருந்தது— என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் கூறினார்.

பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:--

தனது ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நோக்கத்துக்கு விழுந்த ஓர் அடியே முல்லைத்தீவுத் தாக்குதலாகும்.

விடுதலைப்புலிகளின் தளத்துக்கு அண்மையில் காட்டுப் பகுதியில்— இராணுவ விஸ்தரிப்புக்கும் விநியோக வேலைகளுக்கும் முக்கிய இடமாக—

ஏராளமான ஆயுத தளபாடங்கள் குவிக்கப்பட்ட முகாமாக இருந்ததால் அது தாக்கப்படவேண்டிய ஒரு முக்கிய இலக்காக அமைந்தது.

இராணுவ தளபாட சேகரிப்பை இராணுவத்திடமிருந்துதான் புலிகள் பெறுகின்றார்கள்.

அதற்கு ஒரு வாய்ப்பாக இத்தாக்குதல் அமைந்தது.

ஏராளமான ஆயுதங்கள், கவச வாகனங்கள், இரண்டு ஆட்டிலறிகள் போன்றவற்றை இத்தாக்குதலில் புலிகள் கைப்பற்றியுள்ளனர். —என்றார்

# இரு தரப்பு பேச்சு இல்லையேல் புலிகளின் தாக்குதல் தொடரும்

## மட்டக்களப்பு எம். பி. சொல்கிறார்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமானால் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளும் பேச்சு நடத்த வேண்டும். இவ்வாறு பேசாவிட்டால் கெரில்லாத் தாக்குதலில் தேர்ச்சி பெற்ற விடுதலைப் புலிகள் தமது தாக்குதலைத் தொடர்வர்.

இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு எம்.பி. திரு. ஜோசப் பரராஜசிங்கம்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அவர் வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு தாக்குதலின் அரசியல் தாக்கம் ஒருபுறமிருக்க, வடக்கு — கிழக்கு போராட்டத்தில் அது ஒரு திருப்பு முனையாக அமையக் கூடிய வாய்ப்பு உள்ளது.

புலிகள் தங்களது கெரில்லா போர்த்தந்திரத்தை முழுமையாகப் பாவிக்கக் கூடிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுள்ளதால் இது போன்ற அதிரடித் தாக்குதல்கள் தொடரும் வாய்ப்பும் உள்ளது.

அதேவேளை இத்தாக்குதலினால் அரசியலிலும் சில மாற்றங்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் தென்படுகிறது

இத்தாக்குதல் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அரசியல் நடவடிக்கை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் இராணுவ நடவடிக்கையைத் தளர்த்தவேண்டும். — என்றார்.

(உ-3-10)

## அரச படைகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க கூறியதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

முல்லைத்தீவுக்கு பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள அலம்பில் பகுதியில் ஹெலிகளில் வந்திறங்கிய கூடுதல் இராணுவத்தையும் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குகின்றனர் என்றும்—

தாக்குதல் நீடித்து வருகின்றது என்றும்—

'வெரித்தாஸ்' வானொலி நேற்றுக் காலையும் மாலையும் தனது செய்தியில் தெரிவித்தது.

பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகளில் விசேட தாக்குதல் படையினர் முல்லைத்தீவு முகாம் பகுதிக்கு அனுப்பப்பட்ட போதிலும், இறந்த படையினரின் சடலங்களையோ அல்லது காயமடைந்தவர்களையோ ஏற்றுவதற்கு இராணுவ முகாமுக்குள் செல்ல முடியாமல் உள்ளது என இராணுவப் பேச்சாளர் கூறியதாக ''வெரித்தாஸ் வானொலியின் சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணிக்கு அனுப்பப்பட்ட படையணிகளும் கடும் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் —

அந்தப் படையணியில் ஐம்பது பேர் வரை காயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் -

முல்லைத்தீவு இராணுவ முகாமை தக்க வைப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்க கூடிய துருப்புகளுடன் இந்த மீட்பு அணிகளால் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை என்றும் —

பி. பி. ஸியின் ஆசிய சேவையில் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

14 மணி நேரம் முல்லைத்தீவு முகாம் பகுதியில் சண்டை நடைபெற்றதாகவும் —

புலிகளின் தாக்குதல் ஆரம்பித்ததும் இராணுவத்தில் ஒரு பகுதியினர் எதிர்த்தவாறே காடுகளை நோக்கிப் பின்வாங்கியதாகவும் —

மற்றுமொரு பகுதியினர் மேலதிக உதவிகள் கிடைக்கும் வரை எதிர்த் தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர் எனவும் 'வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.'

எம்மிடம் வந்துபோகும் சிரமத்தை நாம் அறிவோம்.
இப்போது குறுகிய நாளில் பாடல் பதிவுகள்.
புதிய பாடல் டிஸ்க்குகள் எம்மிடம் வந்துவிட்டன.

"இந்தியன்" தொடக்கம் "நம்மவர்" வரை

பிரியம், வண்ணக்குயில், சிறைச்சாலை, சுந்தரபுருசன், முதல் அலை,
கோயம்புத்தூர் மாப்பிள்ளை, தமிழ்செல்வன், வெண்ணிலா,
முறைமாப்பிள்ளை, மாணிக்கம், சிவசக்தி, சுட்டப்பஞ்சாயத்து,
காலம் மாறிப்போச்சு, ராஜாளி, மாண்புகுமிகு மாணவன், ரகசியப்பொலிஸ்,
ஆவதும் பெண்ணால் அழிவதும பெண்ணால், பரிவட்டம், வைகைக்கரைப் பூக்கள்.

ஷண் றெக்கோடிங்ஸ்வொட்
சிறுப்ப அங்காடி [வைரவர் கோவில் அருகில்] யாழ்நகர்.

சங்கீதம் சங்கமிக்கும் சங்கீத சாம்ராஜ்யம்

(சி/2650)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்
துர்க்காபுரம்

ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய
அலங்கார உற்சவம்

நிகழும் தாது வருடம் ஆடிமாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (21 - 07 - 96) உற்சவம் ஆரம்பமாகி ஆடிமாதம் 15 ஆம் திகதி (30 – 07 – 96) செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும். 9 ஆம் நாள் ஆடி மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை (29 – 07 - 96 தீமிதித்தல் வைபவமும் வாளேற்ற வைபவமும் நடைபெறும். அம்பிகை அடியார்கள் எல்லோரையும் விழாவில் கலந்து கொண்டு தேவியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஆயல உற்சவ பிரதம குருக்கள்
கிரியாகலாமணி சிவஸ்ரீ குமாரஸ்ரீகாந்தக் குருக்கள்
(சங்கத்தானை, சாவகச்சேரி,)

ஆலய தர்மகர்த்தா,
சி. நவரத்தினம்.

(41820)

விசேஷ ஆராதனைகள்

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

நேரம்: தினமும் மாலை 3.30 மணிக்கும்
காலை 9.00 மணிக்கும்

காலம்: 1996 ஜூலை மாதம் 19 முதல் 21 வரை
ஞாயிறு காலை ஆராதனையுடன் முடிவடையும்

பாவம், பயம், நோய், புகைத்தல், பேய், பில்லிசூனியம், மதுபானம், தீயபழக்கங்கள், விரக்தியிலிருந்து விடுதலை தர "இயேசு கிறிஸ்து" வல்லவராயிருக்கிறார்.

இலவச உட்பிரவேசம்

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்.
அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் (உபா 33,27)

(41862)

மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 20-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org